**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.
2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.06/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.25/2017**

வசந்தி ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. சரவணன்
2. முத்துச்செல்வி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 24.09.2025 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு, 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மெமோ, அசல் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும் மற்றும் இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ், வாதி தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.10.16 17:53:16 +0530

**<u>1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் அசல் வழக்கை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மீது பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு 23.04.2019ம் தேதியில் வாதி/மனுதாரர் தரப்பில் முதல்நிலை சாட்சியம் பிரமாண வாக்குமூலம் எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதியை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய போடப்பட்டிருந்த சமயத்தில் 18.09.2019ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி 1ம் பிரதிவாதியின்/1ம் எதிர்மனுதாரர் கூடுதல் எதிர்வழக்குரையில் 1ம் எதிர்மனுதாரர் பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து 2ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 14.07.2017ம் தேதியில் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டதாகவும், ஆதலால் 2ம் எதிர்மனுதாரர் மேற்படி வழக்கில் அவசியகட்சி என்று கூறிய பிறகே மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரின் மோசடி கிரையம் தெரியவந்தது என்றும், மேற்படி மனுதாரர் தரப்பில் விளம்புகை மற்றும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் வழக்கில் அவசியக்கட்சி என்று மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் 15.12.2021ம் தேதியில் ஆர்டர் 1 ரூல் 10(2)ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்றும், அதன்பேரில் மனுதாரர் தரப்பில் சீர்திருத்தம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரர் தரப்பில் சாட்சியம் முடிந்தபிறகு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் முதல்நிலை சாட்சியம் எடுத்த பின்பு 2ம் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யபட வேண்டிய நேரத்தில் வழக்கு கட்டுக்களை ஆராயும்போது மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பொய் எதிர்வழக்குரை சங்கதிகளை பற்றி மனுதாரர் தரப்பில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யப்படவில்லை என தெரியவந்தது என்றும், மேற்படி தவறு வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:53:25 +0530

ஏற்பட்டது என்றும், மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரரின் பொய்யான எதிர்வழக்குரையை மறுத்து கட்சி செய்தும், மனுதாரர் தரப்பில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் சாட்சியம் இந்நீதிமன்றத்தில் எடுத்தால்தான் மனுதாரர் வழக்கை இந்நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியும் என்றும், மேற்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை இந்நீதிமன்றம் அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்களும் சொத்து இழப்பும், மன உளைச்சலும் ஏற்படக்கூடும் என்றும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், மேற்படி வழக்கும் பாதிப்பு ஏற்படபோவதில்லை என்றும், மனுதாரரின் இம்மனுவினை இந்நீதிமன்றம் மன்னித்து ஏற்று மனுதாரருக்கு ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பித்து மேற்படி வழக்கில் கூடுதல் எழுவினா வனைந்து மனுதாரரின் வழக்கை ருசிக்க செய்ய வேண்டியது நீதியின், நியாயத்தின் பொருட்டு அவசியமாய் உள்ளது என்றும், ஆகையால் வாதி தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையை இந்நீதிமன்றம் Receive செய்து கொள்ள உத்தரவிடக் கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை மெமோவின் சுருக்கம்</u> :–

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரரை அவசிய கட்சி என சேர்க்க கடந்த 2021ம் ஆண்டே மனு செய்து மனு அனுமதிக்கப்பட்ட பின்பு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 2022ம் ஆண்டே எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டு பின்பு 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு பின்னிட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் மனுதாரரை குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு பின்னிட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணையும் முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் ஏதோ பல்வேறு பொய்யான காரணங்களை கூறிக்கொண்டு மனுதாரின் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும்,

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.10.16 17:53:34 +0530

2ம் எதிர்மனுதாரரின் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் மனுதாரர் தரப்பை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்துமுடித்த பின்பும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை துவக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மீண்டும் மனுதாரர்தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்து மீண்டும் கூடுதல் சாட்சிய நிரூபண உறுதிக்கூற்று தாக்கல் செய்ய வேண்டியிருப்பதாக கூறியிருப்பதும் இவ்வழக்கினை வேண்டுமென்றே காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுதாரர் தரப்பில் பதில் எதிர்வழக்குரை என்பது மனுதாரர் தரப்புக்கு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது எதிராக உள்ள சங்கதிகளை புதிதாக தோற்றுவிக்கும் நோக்கில் உள்ளது என்றும், எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1வது எதிர்மனுதாரர்/1வது பிரதிவாதி தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை மெமோ, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது வாதி தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:53:42 +0530

செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கில் கடந்த 25.04.2019 ல் வாதி வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்து வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.3/2021 இந்நீதிமன்றத்தால் 02.12.2022 ல் அனுமதிக்கப்பட்டதன்பேரில் 2 வது பிரதிவாதி அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த 17.10.2022 ல் 2 வது பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் வாதிக்கு பதில் வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பானது இந்நீதிமன்றத்தால் வழங்கப்படாமல் விடுபட்டுள்ளது.

8) அதன்பிறகு வா.சா.1 1, 2 பிரதிவாதிகளால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு வாதி தரப்பு சாட்சியம் முடிவடைந்தபிறகு, 2 வது பிரதிவாதி தரப்பில் 2 வது பிரதிவாதி பி.வா.சா.1 ஆக முதல்விசாரணை செய்யப்பட்டு அசல் வழக்கானது தற்பொழுது பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

9) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சாட்சியம் முடிந்தபிறகு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் முதல்நிலை சாட்சியம் எடுத்த பின்பு 2 ம் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யபட வேண்டிய நேரத்தில் வழக்கு கட்டுக்களை ஆராயும்போது மனுதாரர் தரப்பில் 2 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பொய் எதிர்வழக்குரை சங்கதிகளை பற்றி மனுதாரர் தரப்பில் ரிப்ளை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யப்படவில்லை என தெரியவந்தது என்றும், மேற்படி தவறு வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும், மனுதாரர் தரப்பில் 2 ம் எதிர்மனுதாரரின் பொய்யான எதிர்வழக்குரையை மறுத்து கட்சி செய்தும், மனுதாரர் தரப்பில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் சாட்சியம் இந்நீதிமன்றத்தில் எடுத்தால்தான் மனுதாரர் வழக்கை இந்நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியும் என்றும் கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.10.16 17:53:52 +0530

10) இம்மனுவின் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரரை அவசிய கட்சி என சேர்க்க கடந்த 2021ம் ஆண்டே மனு செய்து மனு அனுமதிக்கப்பட்ட பின்பு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கடந்த 2022ம் ஆண்டே எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டு பின்பு 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு பின்னிட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் மனுதாரரை குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் விசாரணை முடிக்கப்பட்டு பின்னிட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணையும் முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் ஏதோ பல்வேறு பொய்யான காரணங்களை கூறிக்கொண்டு மனுதாரின் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், 2ம் எதிர்மனுதாரரின் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் மனுதாரர் தரப்பை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்துமுடித்த பின்பும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை துவக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மீண்டும் மனுதாரர்தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்து மீண்டும் கூடுதல் சாட்சிய நிரூபண உறுதிக்கூற்று தாக்கல் செய்ய வேண்டியிருப்பதாக கூறியிருப்பதும் இவ்வழக்கினை வேண்டுமென்றே காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுதாரர் தரப்பில் பதில் எதிர்வழக்குரை என்பது மனுதாரர் தரப்புக்கு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது எதிராக உள்ள சங்கதிகளை புதிதாக தோற்றுவிக்கும் நோக்கில் உள்ளது என்றும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

11) அசல் வழக்கில் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை மறுத்து பதில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரர்/வாதிக்கு இந்நீதிமன்றத்தால் வாய்ப்பு வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

12) மேலும், மனுதாரர்/வாதி தரப்பு பதில் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்வதால் அசல் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கும், தரப்பினர்களுக்கு இடையே மேலும் பல வழக்குகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், மனுதாரர் தரப்பு பதில் எதிர்வழக்குரை இந்நீதிமன்றம்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.10.16 17:54:02 +0530

ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13) இருப்பினும், இம்மனுவில் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டதுபோல இம்மனுவானது வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிந்து, தற்பொழுது பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மிகவும் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14) மனுதாரர்/வாதி தரப்பு பதில் எதிர்வழக்குரையை மிகவும் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதால் 2ம் எதிர்மனுதாரர்/2வது பிரதிவாதிக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**15) இறுதியாக**

இம்மனுவானது ரூ.1500/- (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 2வது எதிர்மனுதாரருக்கு நேரடியாக 04.11.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 04.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:54:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

**- இல்லை -**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:54:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.06/2025
in
O.S.No.25/2017
உத்தரவு (Draft / Fair)

நாள் : 16.10.2025